# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| HMOP.No.78/2021 | Date : 25.11.2024 | RW1 |
|---|---|---|
| Name: சூர்யா | க/பெ.நடராஜன் | |

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

16.09.2007ம் தேதி எனக்கும் மனுதாரருக்கும் மீனாட்சி சொக்கநாதன் கோவிலில் இருதரப்பு பெரியோர்களின் சம்மதத்தின் பேரில் திருமணம் நடந்தது என்றால் சரிதான். திருமணமாகி அதிகபட்சமாக மனுதாரருடன் நான் எவ்வளவு நாட்கள் வாழ்ந்துள்ளேன் என்றால் சுமார் ஒரு வருடம் வாழ்ந்தேன். மேற்படி ஒரு வருடமும் மனுதாரர் வீட்டில் வாழ்ந்து வந்தேனா என்றால் மனுதாரரின் பெற்றோர்களுடன் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வந்தேன். நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.2 ஆவணத்தின்படி கடந்த 2015ம் வருடத்திலேயே எனது கணவர் என்னிடம் விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்துள்ளார் என்றால்சரிதான். 2014ம் வருடத்தில் நான் ஜீவனாம்ச வழக்கு தாக்கல் செய்தேன். இதுநாள் வரை எனக்கும், எனது மகனுக்கும் ஜீவனாம்ச தொகை பெற்று வருகிறேன் என்றால் சரியாக கொடுப்பதில்லை. நான் சொல்வது தவறு என்றும் ஒவ்வொரு வாய்தாவிற்கும் நான் ஜீவனாம்சம் பெற்று வருகிறேன் என்றும் வழக்கிற்காக சரியாக கொடுப்பதில்லை என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2008ம் வருடத்தில் நான் மனுதாரரின் வீட்டில் இருந்து வெளியே வந்துவிட்டேன் என்றால்ச ரிதான். இதுநாள் வரை 16 வருடங்களாக மனுதாரருடன் நான் சேர்ந்து வாழ வேண்டும் என்று கோரி மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கடந்த 16 வருடங்களாக எனது மகனை மனுதாரருடன் சேர்ந்திருக்க அனுப்பிவைத்துள்ளேனா என்றால் எனது கணவர் எனது மகனை இரண்டு முறை தான் பார்த்துள்ளார். எனது மகன் 3 மாத குழந்தையாக இருக்கும் போது நான் எனது கணவரின் வீட்டிற்கு நான் என் மகனை அழைத்து சென்ற போது எங்களை வீட்டிற்குள் விடாமல் அனுப்பிவிட்டார்கள். மனுதாரர் மாற்று திறனாளி(வலது கை சற்று குட்டையாக இருக்கும்) என்று தெரிந்துதான் நான் அவரை திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. மனுதாரர் மாற்று திறனாளி அல்ல.

**வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம்/–சூர்யா

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எல்.கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.